மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : லாபம் வராத காரணத்தால் தனியார் யாரும் அதற்காக விண்ணப்பிக்கவில்லை.

திருச்செந்தூர் நகருக்கு குடிநீர்த் திட்டம்.

*வினா எண். 187—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செதூந்ர் நகருக்கு ஆவுடையார் குளத்திலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அந்த திட்டம் எப்போது ஆரம்பிக்கப் படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ;

(அ) இல்லை.

(ஆ) இவ்வினு எழவில்லை.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, திருச்செந்தூர் நகர மக்களுக்கு தற்போது வழங்கப்படும் குடிநீர் பற்றாக்குறையாக இருப்பதால், அந்தத் திட்டத்தை விரிவுபடுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, திருச்செந்தூர் நகரின் மக்கள் தொகை இரட்டிப்பாசு பெருகிவிட்டதாலும், எண்ணற்ற பயணிகள் அந்நகருக்கு வருவதாலும் திருச்செந்துர் நகருக்கு வழங்கப் படும் தண்ணீர் போதுமானதாக இல்லை என்பதாலும், அத் திட்டத்தை அபிவிருத்தி செய்வது இன்றியமையாததாகும். இத் திட்டத்திற்கான ஆய்வுத் தொகையான ரூ. 27,200-ஐ பேரூராட்சி தமிழ்நாடு வடிகால் வாரியத்திற்குச் செலுத்த வேண்டும். இதனை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்று நடத்த வேண்டும் என்று பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றி இருந்தாலும் அத் தொகையை இன்னும் வாரியத்திற்குப் பேரூராட்சி செலுத்தவில்லை. அத்தொகை செலுத்தப்பட்ட பின் குடிநீர் வாரியம் இதனை துவங்கும்.

ஆய்வின்போது ஆத்தூர் அருகே ஒடும் தாமிரபரணி ஆறு மற்றும் திருச்செந்தூர் அருகேயுள்ள ஆவுடையார்குளம் ஆகிய இடங்கள் நீர் எடுப்பதற்கான மூல இடங்களாக ஏற்றும் ஆய்வு செய்யப்படும்.

1979 பிப்ரவரி 26]

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, ஆய்வுத் தொகையை மதிப்பீட்டுத் தொகையோடு சேர்த்துக் கட்டுவதற்கு அனுமதி வழங்கி அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர அரசு ன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஆய்வுத் தொகையை விரைவில் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் முயற்சி எடுக்க வேண்டும் செல்வாக்கை உபயோகிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. துரை கலியமூர்த்தி : கேள்வியாகக் கேட்கிறேன். திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் நகருக்கு ஆவுடையார் குளத்தில் இருந்து குடிநீர் வழக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று கேட்டதற்கு அமைச்சர் இல்லை என்று சொல்லி விட்டார்கள், விளக்கம் சொல்லவில்லை.. (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

சென்னை நகராட்சித் திட்டங்களுக்கு உதவி.

*வினா எண். 188—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சியின் எந்தெந்த திட்டங்களுக்கு எந்தெந்த ஆண்டுகளில் உலக வங்கியிடமிருந்து எவ்வளவு தொகை கடனாக பெற்றுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சென்னை மாநகராட்சியால் செயல்படுத்தப்படும் சாலை திட்டங்கள் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்துவதற்கென மேற்கொள்ளப்பட்டுள்ள சென்னை நகர்புற வளர்ச்சித் திட்டங்களின் ஒரு பகுதியாகும். இச் சாலைத் திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.2 கோடி. இம் மூன்றாண்டுத் திட்டம் 1977–78 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.